(ஒன்பதாவது பாராளுமன்றம் -  இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **28.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 ஏப்ரல் 22  வெள்ளிக்கிழமை  மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ  மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ  ரன்ஜித் சியம்பலாபிடிய**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ  அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ  மஹிந்த ராஜபக்ஷ,** பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ  திலும் அமுனுகம,** போக்குவரத்து அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ  நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ  தினேஷ் குணவர்தன,** அரச சேவைகள், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ  பிரமித்த பண்டார தென்னகோன்,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

**கௌரவ  (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கல்வி அமைச்சர் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ  பிரசன்ன ரணதுங்க,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ  ஜானக வக்கும்புர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ  விதுர விக்ரமநாயக,** தொழில் அமைச்சர்

**கௌரவ  கஞ்சன விஜேசேகர,** வலுசக்தி அமைச்சர் மற்றும் மின்சக்தி அமைச்சர்

**கௌரவ  கனக ஹேரத்,** நெடுஞ்சாலைகள் அமைச்சர்

**கௌரவ  கபில அதுகோரல,** சிறு ஏற்றுமதிப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ  (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** கலாசார மற்றும் அரங்குக் கலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ  அ. அரவிந்த் குமார்,** தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **டி.வீ. சானக,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அநுராத ஜயரத்ன,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

கௌரவ **றோஹண திஸாநாயக்க,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) கயாஷான் நவனந்த,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அருந்திக்க பர்னாந்து,** பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அசோக்க பிரியந்த,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சாந்த பண்டார,** சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **விஜித பேருகொட,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதாரப் பயிர்ச்செய்கை மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **எஸ். எம். எம். முஸ்ஸாரப்,** புடவைக் கைத்தொழில் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்திகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **லொஹான் ரத்வத்தே,** இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ச. வியாழேந்திரன்,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர்

கௌரவ **இந்திக அனுருத்த ஹேரத்,** வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டிரான் அலஸ்

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ மனோ கணேசன்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ நலின் பிரனாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ உத்திக பிரேமரத்ன**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா**

**கௌரவ வசந்த யாப்பாபண்டார**

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க**

**கௌரவ ரொசான் ரணசிங்க**

**கௌரவ குமாரசிறி ரத்னாயக்க**

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ அலி சப்ரி ரஹீம்**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ அஜித் ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ**

**கௌரவ குணதிலக ராஜபக்ஷ**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ காமினி வலேபொட**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சனாதிபதியின் செய்திகள்:*** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியை சபாநாயகர் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/12/7

2022 ஏப்பிரல் மாதம் 21 ஆந் திகதி

**மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள படைதாங்கு சேவைகளின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

**கோட்டாபய ராஜபக்ஷ**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

"பின்வரிசை உறுப்பினர்கள் வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்கள், பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படும்போது தற்போது பின்பற்றப்படுகின்ற முறையியலின் காரணமாக பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்படுகின்ற அனைத்து நாட்களிலும் ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே வினாக்களைக் கேட்பதற்கான வாய்ப்பு கிடைக்கப்படுவதனால் வினாக்களைச் சமர்ப்பித்துள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சம வாய்ப்பு கிடைக்கப்படுவதில்லையெனத் தெரிவித்து அவ்வுறுப்பினர்கள் பாராளுமன்ற சபாமண்டபத்திலும் தனிப்பட்ட முறையிலும் என்னிடம் முன்வைத்த எழுத்துமூல மற்றும் வாய் மூலமான கோரிக்கைகள் மீது 2022.03.16 மற்றும் 2022.04.08 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதன்படி வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்களைப் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கும் போது புதிய முறையியலொன்றைப் பின்பற்றுவதற்காக பின்வரும் வழிகாட்டல்கள் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன என்பதை இவ்வுயரிய சபைக்கு அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:-

பாராளுமன்ற அமர்வொன்றில் கேட்கப்படும் வாய்மூல விடைக்கான வினாக்களின் எண்ணிக்கையை 10 வினாக்களுக்கு வரையறுத்தல்;

ஒவ்வோர் உறுப்பினராலும் வினாக்கள் கையளிக்கப்பட்டுள்ள வரிசைமுறைப்படி முதலாம் வினாவுக்கு முன்னுரிமையளித்து பாராளுமன்றத்தின் அமர்வுகள் நடத்தப்படும் முதல் தினத்தில் முதலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பத்து (10) உறுப்பினர்களின் தலா ஒரு வினா வீதம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படுதல்;

இரண்டாம் தினத்தில் அடுத்ததாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பத்து (10) உறுப்பினர்களின் வினாக்களை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குதல் மற்றும் ஏனைய நாட்களுக்காகவும் மேற்கூறப்பட்ட வகையில் வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்களை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குதல்;

பதில் வழங்குவதற்காக கால அவகாசம் கோரப்பட்ட வினாக்களைப் பொருத்த மட்டில் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு அடுத்த வாய்ப்பு கிடைக்கப்படும் அமர்வு தினத்தில் அவற்றுக்கு யோக்கியமான முறையில் முன்னுரிமையளிக்கப்படுதல்; மற்றும்

இப்புதிய முறையியலை 2022 மே மாதம் முதலாவது பாராளுமன்ற அமர்வு தினத்திலிருந்து நடைமுறைப்படுத்துதல்."

**அமர்வு நிறுத்தம்**

மு.ப. 10.30 மணிக்கு

மு.ப. 10.50 மணி வரை அமர்வு நிறுத்தப்பட்டது.

மு.ப. 10.50 மணி

அமர்வு தொடங்கியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.

**3. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் , 2019 ஆம் ஆண்டுக்கான சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதியின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52(6) இன் கீழ் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் :** போக்குவரத்து அமைச்சரும் அமைச்சருமானவர் " இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) " சட்டமூலம் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52(6) இன் கீழ் அறிக்கையை சமர்ப்பித்தார்.

சட்டமூலம் 2022 மே 04 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனக் கட்டளையிடப்பட்டது.

**5. பாராளுமன்ற அமர்வுகள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2022 மே 04 ஆம் திகதி, புதன்கிழமை மு.ப. 10.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ உத்திக பிரேமரத்ன பிரேரித்தார். கௌரவ வீரசுமன வீரசிங்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1):** போக்குவரத்து அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213ஆ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 2245/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2):** போக்குவரத்து அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 122, 122அ மற்றும் VIIஅ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 2251/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3):** போக்குவரத்து அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5, 19 மற்றும் 20 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய 2240/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்குவாராக" என கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான முன்மொழிய அதனை கௌரவ கிங்ஸ் நெல்சன் வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.54 மணிக்கு கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்கினார்.)

**10. ஒத்திவைப்பு ( க.பொ.த. ( சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், சுற்றுலாத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது

பாராளுமன்றம், பி.ப. 5.14 மணிக்கு சபைக்குத் தலைமை தாங்கும் உறுப்பினரால் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க 2022 மே 04 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.